V7S

www.freetnbooks.com

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025

வகுப்பு 7

அறிவியல்

கால அளவு: 2.00 மணிநேரம்

மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்வு செய்க** **10×1=10**

1) மனிதனின் சராசரி உடல் வெப்பநிலை ..............

அ) $0^{\circ}C$ ஆ) $37^{\circ}C$ இ) $98^{\circ}C$ ஈ) $100^{\circ}C$

2) வெப்பநிலையினை அளப்பதற்கான SI அலகுமுறை

அ) கெல்வின் ஆ) பாரன்ஹீட் இ) செல்சியஸ் ஈ) ஜூல்

3) சிறிய அளவிலான மின்னோட்டங்கள் மில்லி ஆம்பியரில் (mA) அளக்கப்படுகிறது எனில் 0.25 (A) ஆம்பியர் மின்னோட்டத்தினை ஆம்பியரில் கூறுக

அ) 2.5 mA ஆ) 25 mA இ) 250 mA ஈ) 2500 mA

4) ............ என்பது கால ஒழுங்கு மாற்றத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அ) பூகம்பம் இ) வானில் வானவில் தோன்றுவது

ஆ) கடலில் அலைகள் தோன்றுவது ஈ) மழைபொழிவு

5) .......... வேதிமாற்றம் அல்ல

அ) அமோனியா நீரில் கரைவது ஆ) கார்பன் டை ஆக்சைடு நீரில் கரைவது

இ) உலர்பனிக்கட்டி நீரில் கரைவது ஈ) துருவப்பனிக்குமிழ்கள் உருவாவது

6) செல்லின் மூளையாகச் செயல்படும் செல்லின் பாகம் எது?

அ) லைசோசோம் ஆ) ரைபோசோம்

இ) மைட்டோகாண்டிரியா ஈ) உட்கரு

7) நான் ஒரு விலங்கு செல்லின் வெளிப்புற அடுக்கு நான் யார்?

அ) செல்சுவர் ஆ) உட்கரு இ) செல்சவ்வு ஈ) உட்கரு சவ்வு

8) ஏறத்தாழ புவியில் காணப்படும் சிற்றினங்களின் எண்ணிக்கை

அ) 8.7 மில்லியன் ஆ) 8.6 மில்லியன் இ) 8.5 மில்லியன் ஈ) 8.8 மில்லியன்

9) புறாவின் இரு சொற்பெயர்

அ) ஹோமோ செப்பியன் ஆ) ராட்டஸ் ராட்டஸ்

இ) மாஞ்சிபெரா இன்டிகா ஈ) கொலம்பா லிவியா

10) Tux math மென்பொருள் எதற்குப் பயன்படுகிறது?

அ) வண்ணம் தீட்ட ஆ) கணிதம் கற்க இ) நிரல் பற்றி அறிய ஈ) வரைகலை

**II. ஏதேனும் 15 வினாக்களுக்கு விடையளி.** **15×2=30**

11) மருத்துவ வெப்பநிலைமானியில் காணப்படும் சிறிய வளைவின் பயன்பாடு யாது?

12) **கோடிட்ட இடத்தை நிரப்புக**

அ) அறை வெப்பநிலையிலிருந்து பாதரசம் .............. நிலையில் காணப்படுகிறது.

ஆ) $-7^{\circ}C$ வெப்பநிலையானது $0^{\circ}C$ வெப்பநிலையைவிட ..........

13) பக்க இணைப்பு மற்றும் தொடரிணைப்பு வேறுபடுத்துக

14) அரிதிற்கடத்திகள் சிலவற்றைக் கூறுக

15) **சரியா? தவறா என குறிப்பிடு தவறு எனில் திருத்தி எழுதுக**

அ) வீடுகளில் உள்ள மின் இணைப்பில் அதிக மின் பளு இருந்தால் மின் உருகு இழை உருகாது

ஆ) மின்னோட்டத்தின் A என்ற குறியீட்டால் குறிப்பிடுகிறோம்

16) இரு வெப்ப உமிழ்வினைகளைக் குறிப்பிடுக

17) குளிர்ந்த பாலினை வெப்பப்படுத்தினால் அது சூடாகிறது. இது எந்த வகையான மாற்றம்?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



18) ஒப்புமை தருக

அ) மரக்கட்டையிலிருந்து மரத்தூள் : ............

மரக்கட்டையிலிருந்து சாம்பல் : வேதியியல் மாற்றம்

ஆ) காட்டுத்தீ : ............ மாற்றம்

ஒரு பள்ளியில் பாடவேளை மாறுபாடு : கால ஒழுங்குமாற்றம்

19) பனிக்கட்டி உருகும் போது எந்த மாதிரியான ஆற்றல் மாற்றங்கள் நிகழ்கின்றன

20) தாவர செல்லில் காணப்படும் செல்சுவரின் பணிகள் யாவை?

21) சூரியனின் ஒளி ஆற்றலைப் பயன்படுத்தி ஸ்டார்ச் தயாரிக்கும் நுண் உறுப்பு எது?

22) பொருத்துக

| | | |
|---|---|---|
| அ) கடத்தும் கால்வாய் | - | உட்கரு |
| ஆ) உணவு தயாரிப்பாளர் | - | எண்டோபிளாச வலை |
| இ) கட்டுப்பாட்டு அறை | - | மைட்டோகாண்டிரியா |
| ஈ) ஆற்றல் மையம் | - | பசுங்கணிகம் |

23) உட்கரு பற்றி சிறுகுறிப்பு வரைக.

24) செல் நமக்கு ஏன் மிக முக்கியம்?

25) ஐந்துலக வகைப்பாட்டினை பட்டியலிடுக

26) மொனிராவிற்கு இரண்டு உதாரணம் தருக

27) இருசொற்பெயரிடும் முறை என்பது யாது?

28) கோடிட்ட இடத்தை நிரப்புக

அ) ............ தந்தை, கரோலஸ் லின்னேயஸ் ஆவார்

ஆ) சிற்றினம் என்பது ............ வகைப்பாட்டின் நிலை ஆகும்

29) ரேஞ்சர் விளையாட்டின் பயன் யாது?

30) $68^{o}F$ வெப்பநிலையினை செல்சியஸ் மதிப்பிற்கு மாற்றுக.

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.** **4x5=20**

31) ஆய்வக வெப்பநிலைமானிக்கும், மருத்துவ வெப்பநிலைமானிக்கும் உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகள் யாவை?

**(அல்லது)**

பக்க இணைப்பு மற்றும் தொடரிணைப்பு வேறுபடுத்துக

32) உணவு செரித்தல் ஒரு வேதியியல் மாற்றம் -இவ்வாக்கியத்தை விளக்கவும்

**(அல்லது)**

மண்வெட்டப் பயன்படும் உபகரணங்கள் இரும்புப்பகுதியுடன் மரக்கைப்பிடி எவ்வாறு பொருத்தப்பட்டுள்ளது?

33) ஏதேனும் மூன்று நுண்உறுப்புகளைப் பற்றி விளக்குக

**(அல்லது)**

*பின்வரும் அட்டவணையில் செல்கள், திசுக்கள், உறுப்புகள் என வகைப்படுத்துக.*

நரம்பு செல், நுரையீரல், சைலம், மூளை, கொழுப்புத்திசு, இலை சிவப்பணு, வெள்ளையணு செல்கள், கை, தசை, இதயம், முட்டை, செதில், புளோயம், குருத்தெலும்பு

34) ஐந்து உலக வகைப்பாட்டின் வரைபடம் வரைக

**(அல்லது)**

இருசொற்பெயரிடும் முறை குறிப்பு வரைக.

\- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner